# இயல் - 2

# பாலா - வாழ்வும் படைப்பும்

தமிழ்க்கவிதை இன்று பாரதி, பாரதிதாசனையும் தாண்டிப் புதியதொரு வளர்ச்சியை அடைந்துள்ளது. இக்காலக்கவிதை புதுக்கவிதையென அழைக்கப்படுகின்றது. எண்ணற்ற இலக்கிய வகைகள் இருந்தபோதும் கவிதை இலக்கியத்தின் களம் பரந்து விரிந்துள்ளது. கவிதைக் களத்தில் எண்ணற்றோர் தடம்பதித்து உள்ளனர். அவர்களுள் ஒருவர்தான் கவிஞர் பாலா.

## 2.0 படைப்பாளர் அறிமுகம்

பாலா என உரிமையோடும், உள்ளன்போடும் இலக்கிய ஆர்வலர்களால் அழைக்கப் பெற்றவர் இரா. பாலச்சந்திரன். தனித்தன்மை வாய்ந்த படைப்பிலக்கியவாதி. ஆங்கிலப் பேராசிரியராக, ஒப்பியல் அறிஞராக, கவிஞராக, திறனாய்வாளராக, மொழிபெயர்ப்பாளராக, கம்பீரமிக்க பேச்சாளராக, துடிப்புடன் செயலாற்றும் சாகித்ய அகாதெமியின் ஒருங்கிணைப்பாளராக என்ற பல்வேறு பரிணாமங்களால் உருவானது பாலாவின் ஆளுமை.

படைப்பு என்பது படைப்பாளி தன் காலத்தோடு கொண்டுள்ள உறவின் வெளிப்பாடாகும். படைப்புகளிலிருந்து படைப்பாளியின் மதிப்பீடுகளையும் கண்டறிய முடிகின்றது. அதனால் தான் இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்கிறோம். சூழல் இல்லாமல் எதுவும் தோன்றாது. அந்த வகையில் படைப்பில் படைப்பாளியின் வாழ்வியல் சூழல்கள் முக்கிய இடம்பெறுகின்றன. இதற்கு படைப்பாளியின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் காரணமாக அமைகின்றன. பெற்றோர், கல்வி, ஆற்றிய பணிகள் ஆகியவை படைப்புகளுக்குக் காரணிகளாகின்றன.

பாலாவின் படைப்புகளை ஆராய்வதற்கு இத்தகைய வாழ்வியல் களங்களும் பெரிதும் பயன்தருவதால் அவரது வாழ்வியலையும் படைப்புகளையும் விளக்கும் வகையில் இவ்வியல் ஆய்வு அமைந்துள்ளது.

## 2.1 பிறப்பு

சிவகங்கை என்றாலே முதலில் நினைவுக்கு வருபவர்கள் மருது சகோதரர்களான பெரிய மருதுவும், சின்ன மருதுவும் தான். அதற்கடுத்து நினைவுக்கு வருபவர்கள் கவிஞர்கள் மீராவும், பாலாவும்.

முன்னவர்கள் இருவரும் தங்களுடைய நாட்டுப்பற்றில் மக்களின் கவனத்தைப் பெற்றவர்கள். பின்னவர் இருவரும் தங்களுடைய இலக்கியப் பணிகளால் தமிழ் இலக்கியத் தடத்திலும் தமிழர்களின் இதயங்களிலும் நிறைந்திருப்பவர்கள்.

வரலாற்றுச் சிறப்புமிக்க சிவகங்கைச் சீமையில் 13.01.1946 அன்று இராமதாஸ்- ஞானாம்பிகை தம்பதியருக்குப பிறந்தவர் இரா.பாலச்சந்திரன்.

## 2.2 கல்வியும் பணியும்

- சிவகங்கை மன்னர் பள்ளியில் பள்ளிக்கல்வி
- காரைக்குடி அழகப்பா கல்லூரியில் 1963-1965 வரை வேதியியலை விருப்பப் பாடமாக எடுத்துப் பயின்ற பட்டப்படிப்பு.
- 1975 இல் திருப்பதி வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்தில் ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப்பட்டம்.
- 1991 இல் ஒப்பிலக்கியத் துறையில் மிகவும் புகழ்பெற்ற பேராசிரியர் முனைவர் கா.செல்லப்பன் அவர்களிடம் "Imagination and Symbolism in Tamil New Poetry and British Modern Poetry" எனும் தலைப்பில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்து ஆங்கிலத்தில் முனைவர் பட்டம்.

பாலா பட்டம் பெற்றதோடு மட்டுமில்லாமல் கற்றதைச் சமூகத்திற்குத் திருப்பித் தரவேண்டும் என்ற எண்ணத்தில் ஆசிரியப் பணியை மேற்கொண்டார். ஆசிரியப் பணியை அறப்பணியாகச் செய்தவர் அவர்.

1966 இல் முதற்பணியை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தொழில் நுட்பத் துறையில் மேற்கொண்டார். அப்போது அவருக்கு வயது இருபதே. "அன்றைய மாத ஊதியமான 150 ரூபாயில் 60 ரூபாய் அம்மாவுக்கு அனுப்பி வைத்த பொறுப்பான தன்மை பாலாவிடம் காணலாம்"[1] என்பார் நா.முத்துநிலவன்.

- 1968 இல் சேலம் இராசிபுரத்தில் உள்ள திருவள்ளுவர் அரசுக் கலைக் கல்லூரியில் பட்டதாரி பயிற்றுநராகப் பணி.
- 1974 இல் புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரியில் ஆங்கில விரிவுரையாளர். இருபது ஆண்டுகளுக்கு மேலாக பாலா ஒரு நல்ல பேராசிரியராக படைப்பாளியாகத் தன்னை அடையாளப் படுத்திக் கொண்டது புதுக்கோட்டையில் தான்.
- 1993 இல் திருநெல்வேலியில் உள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத் துறை இணைப் பேராசிரியராகப் பணியாற்றியவர்.
- 2001 இல் துறைத்தலைவராகப் பேராசிரியப் பதவி உயர்வு பெற்று, பணியினை நிறைவு செய்தவர்.
- 2001இல் கொல்கத்தா ஜாதவ்பூர் பல்கலைக்கழகத்தின் ஒப்பாய்வுத் துறையில் வருகை தரு பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

இப்படிக் கல்விப் பணியில் பற்பல சாதனை புரிந்தவர். "அவருடைய உழைப்பும் உண்மையும் அர்ப்பணிப்பும் பேராசிரியர்கள் அனைவராலும் பின்பற்றப்பட வேண்டியவை ஆகும்"[2] என்பார் கவிஞர் மு. மேத்தா.

## 2.3 இல்லற வாழ்க்கை

மனித வாழ்க்கை உறவுகளால் ஆனது. ‘சடங்குகள்’ மனித உறவுகளைப் புதுப்பித்துக் கொண்டே இருக்கின்றன. இல்வாழ்க்கைக்கான நுழைவாயில் தான் திருமணம் என்ற சடங்கு.

‘கதவு அருகே சொற்கள்’ என்ற நூலில் ‘சுற்றமும் நட்பும்’ என்ற தலைப்பில், திருமணத்தைப் பற்றி "ஒரு காலத்தில் திருமணங்கள் நடந்தன. வீடுகளில் நடந்தன. வீடுகள் தெருக்களில் இருப்பதால் தெருக்களை அடைத்து பந்தல் போட்டு ஊருக்குப் பந்தி வைத்துத் திருமணங்கள் நடந்தன. இப்போது திருமண மண்டபங்களில் நிகழ்கின்றன. இதற்கு வீடுகள் சிறியதாக இருப்பது மட்டும் காரணம் அல்ல. மனதும் சிறியதாக இருப்பதுதான் காரணம். ஆனால் நம்முடைய வாழ்க்கை என்பது நட்பையும் உறவையும் பேணுவது. சுற்றத்தால் வாழ்வதுதான் வாழ்க்கை. மாறலாம் வாழ்க்கை, ஆனால் மாறக்கூடாது மனிதன்"[3] என்று திருமண உறவுகளைச் சுட்டிக்காட்டுவார் பாலா.

1974 இல் சிவகங்கையில் சோமசுந்தரம், சுலோசனா தம்பதியரின் மகள் மஞ்சுளாவை வாழ்க்கைத் துணைவியாக பாலா ஏற்றுக் கொண்டார்.

1974 இல் பாலாவின் திருமணம் ஒரு முழுமையான தமிழ்க் கவிதையின் திருவிழாவாக சிவகங்கையில் நடைபெற்றது. அன்று தான் கவிஞர் மீரா, கவிக்கோ, சிற்பி, புவியரசு, தமிழ்நாடன் மற்றும் பிற தமிழ்க்கவிஞர்கள் முன்னிலையில் கவிஞர் மு. மேத்தாவின் கண்ணீர்ப்பூக்கள் வெளியீடு நடைபெற்றது.

"இரவில் பிரமாதமான கோழிக் கறியுடன் சிறப்பு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த விருந்து தயாராகும் வரை அவர் வீடு இருந்த தெருவில் ஒரு கோயில் மண்டபத்தில் அமர்ந்து சி.ஆர். ரவீந்திரன், தமிழ்நாடன் எல்லோரும் பசியோடு ஆனால் பசி தெரியாமல் அந்த பிரகாசமற்ற வெளிச்சத்தில் பேசிக்

கொண்டிருந்ததெல்லாம் ஒரு பழமைத் தன்மை வாய்ந்த படிமமாக (antiquity) படிந்து போயிருக்கிறது"[4] என்று கவிஞர் கலாப்ரியா மனந்திறந்து எழுதியுள்ளார்.

பாலா, மஞ்சுளா தம்பதியரின் இல்லறப் பயணத்திற்கு மக்கட் செல்வங்களாக இருவர்.

1975 அக்டோபர் 16 ஞானப்பிரியா

1976 அக்டோபர் 19 சரத் கார்த்திக்

சரத் சந்திரரின் நூற்றாண்டு நினைவு நாளில் பிறந்ததால் 'சரத்' என்ற அடைமொழியோடு சரத் கார்த்திக் என்ற பெயரைச் சூட்டியுள்ளார். பாலாவின் இலக்கிய ஆளுமையும், இல்லறவியலும் இணைந்தே உள்ளது என்பதை இந்தப் பெயர்சூட்டிய தன்மை வெளிப்படுத்துகிறது.

"ஆங்கிலப் பேராசிரியராக அவர் பணியாற்றினாலும் தமிழ் மீது அவருக்கு இருந்த பாசம்.... எல்லையில்லாதது. மம்மி, டாடி என்று இன்றைக்கு எல்லா வீட்டு முற்றங்களிலும் எதிரொலிக்கும். ஆனால் ஆங்கிலப் பேராசிரியர் பாலா அண்ணன் வீட்டில் இதனை நான் இதுவரை கேட்டதில்லை. ஞானப்பிரியா- சரத்கார்த்திக் இருவருமே அப்பா- அம்மா என்று சொல்லித்தான் கேட்டிருக்கிறேன்"[5] என்று பாலாவின் இளைய சகோதரர் பிரபாகரன், பாலாவின் இல்லற வாழ்க்கையின் இனிய மலரும் நினைவுகளைப் பதிவு செய்துள்ளார்.

### 2.4 படைப்பாளுமை

ஒருவரது ஆளுமைப் பண்பு மற்றவரிடமிருந்து அவரைத் தனியே பிரித்துக்காட்டும். நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலும், பெறுகின்ற ஒவ்வொரு அனுபவமும், சிந்தனையும் தம் மனதில் தம் பதிவுகளை உருவாக்குகின்றன. அவை நமக்கு வெளிப்படையாகத் தோன்றாவிட்டாலும், ஆழ்மனதில் புதைந்து கிடக்கின்றன. அவ்வாறு புதைந்து கிடக்கும் மனப்பதிவுகளே இன்று நாம் யார் என்பதை நிர்ணயிக்கின்றன. எனவே நமது மனப்பதிவுகளின் விளைவே நமது பண்பு

நலன்களாக உருவாகின்றன. நமது மனப்பதிவுகள் நன்றாக இருந்தால் நமது பண்பு நலன்களும் நன்றாக இருக்கும். நமது மனப்பதிவுகள் தீயவையாக இருந்தால் நமது பண்பு நலன்களும் தீயவைகளாக இருக்கும். ஒருவன் நல்லனவற்றைப் பற்றி மட்டுமே சிந்தித்தும், பேசியும், படித்தும், கேட்டும் வரும்போது மனப்பதிவுகளில் நல்லனவற்றின் ஆதிக்கம் அதிகம் இருக்கும். அப்போது நமது சிந்தனை செயல்பாடு மற்றும் அனுபவங்கள் நமது மனத்தில் நல்ல பதிவுகளை உருவாக்கும். அப்பதிவுகளே நமது பழக்கவழக்கங்களை நிர்ணயிக்கின்றன. அப்பழக்கவழக்கங்களே ஒருவரின் ஆளுமைப் பண்பைச் சுட்டிக்காட்டுகின்றன.

சங்க இலக்கியத்தில் ஆளுமைப் பண்பு என்பது பலவிதமாக வெளிப்படுகிறது. தனிமனிதன், அரசன், புலவன், சமூகம் என்று ஒவ்வொருவருக்கும் பலவிதமான ஆளுமைப்பண்பு உண்டு. ஒரு மனிதனுக்கு ஒரே பண்பு இருக்க வேண்டும் என்பதில்லை. நல்ல பண்பும் இருக்கும். தீய பண்பும் இருக்கும். இதில் எது மேலோங்கி இருக்கின்றதோ அதுவே அந்த மனிதனைப் பெரும்பாலும் ஆளும் திறமையைப் பெறுகின்றது. எனவே மேற்சொன்ன கருத்துகளில் இருந்து ஆளுமை என்பது உள்ளத்தின் வெளிப்பாடு ஆகும். இதற்கு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரையறை இல்லை. உளவியல் நோக்கில் ஆளுமை என்பது ஒருவரைத் தனித்துவமான மனிதராக ஆக்கும் எண்ணங்கள் உணர்வுகள் என்பனவற்றால் ஆன ஒன்று என வரையறை கூறலாம்.

கவிஞர் பாலாவின் படைப்புகளை நோக்கும் போது சமூகம் மற்றும் தனிமனித மேம்பாட்டுக்கு இவரது படைப்புகள் உறுதுணையாக இருக்கின்றன என்பதை உணரலாம்.

### 2.5 புத்தகப் படைப்புகள்: கவிதை - திறனாய்வு

1. புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை
2. திண்ணைகளும் வரவேற்பறைகளும்

3. நினைவில் தப்பிய முகம்
4. வித்யாபதியின் காதற்கவிதைகள்
5. சர்ரியலிசம்
6. கவிதைப்பக்கம்
7. இன்னொரு மனிதர்கள்
8. முன்னுரையும் பின்னுரையும்
9. கவிதை ஒரு கலந்துரையாடல்
10. தமிழ் இலக்கிய விமர்சகர்கள்
11. தமிழ் நவீனத்துவத்தின் முன்னோடிகள்
12. கதவு அருகே சொற்கள்
13 பாரதியும் கீட்சும்
14. மகாகவி பாரதியின் சிந்தனைவெளி

**தொகுப்பாசிரியர்**

1. மு. மேத்தா கவிதைகள்
2. சிற்பியின் கவிதை வானம்
3. சிற்பியின் கவிதைப் பயணம்

**ஆங்கில நூல்கள்**

1.Selected Poems of Mu. Metha.

2.Meera His Life and Art

3.Tamil Modern Poetry, Bharathidasan and after

இப்படைப்புகள் ஒவ்வொன்றும் கவிஞர் பாலாவின் உயர்ந்த ஆளுமைப் பண்புகளை விளக்குவதாகவே உள்ளன. இதன்மூலம் படைப்பாளி, படைப்பு, படைப்பாற்றல், படைப்பின் பின்னணி, படைப்புகளுக்கான சூழல், படைப்பிலக்கியம், படைப்புக்கலை, படைப்பாளிகளின் வாழ்க்கை, படைப்பின் நோக்கம், படைப்புகளின்

தன்மை, படைப்பாளியின் அறிவு, மொழி நடை, மொழி அமைப்பு, திறனாய்வு, மொழிபெயர்ப்பு ஆகிய அனைத்தையும் அறிய முடிகிறது.

## 2.6 கவிஞர் பாலா

தமிழ்க்கவிதையில் ஒரு புதிய மொழியை வடிவமைத்தவர் கவிஞர் பாலா. பாலா என்றால் புதிர் மொழியோ, புரியாத மொழியோ அல்ல. மொழித்திறன் படைத்த கவிதை மொழி பாலாவின் மொழியாகும்.

"மொழியை இரும்பாக்கிக் கவிதையைக் கரடுமுரடான இயந்திரமாக்கிப் படிப்பவன் நெஞ்சைச் சுமைதாங்கி ஆக்குகிற கொடுமைக்கு ஒரு போதும் இவர் துணை போனதில்லை. மெத்தப் படித்த அனுபவம் எளிமையில் கவிதையில் கனத்தை முன் வைக்கிறது"[6] என்று பாலாவின் கவிதையை அடையாளப்படுத்துகிறார் கவிஞர் சிற்பி.

'என் கவிதை' என்ற தலைப்பில்,

"கவிதையைப் புதிதாக்குவது பற்றி
என்னிடம் பேசாதீர்கள்!
நான் உண்மையைக்
கவிதையாக்கிக்
கொண்டிருக்கிறேன்"[7]

என்று தன் கவிதைப் பயணத்தைப் பற்றி கவிதையாக்கியுள்ளார். அலங்காரங்கள் இல்லாத கவிதைக்கு வாழ்வியல் எதார்த்தமே அலங்காரமாகிவிடுகிறது. இந்த ஆளுமைதான் பாலாவின் கவிதை ஆளுமை எனலாம்.

'திண்ணைகளும் வரவேற்பறைகளும்' என்ற கவிதை இன்றைய சமூகத்தைக் கேலி செய்யும் அங்கதக் கவிதை.

"எல்லாம் இருக்கிறது வரவேற்பறைகளில்,
மனிதம் இருக்கிறதா அங்கே?"[8]

என்று இழந்துபோன மனித நேயத்தை நினைத்து வருத்தப்படுகிறார். வாழ்க்கையின் கடும் சோகம் தான் உன்னத கவிதைகளுக்கான மூலதனம் என்பது பாலாவின் கவிகளுக்கும் பொருந்தும். இந்தக் கவிதைப் பயணம் கல்லூரி நாட்களிலேயே தொடங்கியிருந்தாலும் இராசிபுரத்தில் அரசுக் கல்லூரியில் சேர்ந்த பின்பு தான் முனைப்பான இலக்குடன் தொடங்கியது. இந்த முனைப்பிற்குக் காரணம் அவருடன் பணியாற்றிய கவிஞர் மு.மேத்தா ஆவார். கவிஞர் மேத்தாவுடன் பழகிய நாட்கள் அவருக்குள் கவிதை ஊற்றை வெளிப்படுத்தியது.

வானம்பாடி, கண்ணதாசன், தீபம், தாமரை ஆகிய இதழ்களில் கவிஞர் பாலாவின் கவிதைகள் இடம்பெற்றன. இந்தக் கவிதைகள் வாசகர் மனங்களில் தடம்பதித்தன.

"கடந்த காலம்
ஒரு உடைந்த மண் கலம்
எதிர்காலம் ஒரு அமுதப்
பொற் கலசம்
நிகழ்காலம்
ஒரு வெற்றுப்
பாத்திரம்
எனினும்
உள்ளே தெரியும்
வர்ணமயமாய்
கனவுகள்
பழைய நிராசையின்
பூரண நிழலாய்"[9]

கவிதை வரலாற்றில் பூரண நிழலாய் பாலாவின் கவிநயம் இக்கவிதையில் மிளிர்கிறது.

## 2.7 வானம்பாடிக் கவிஞர்

சமுதாய அவலங்களைக் கண்டு அறவழிச் சினங்கொண்டு உள்ளத்தின் எழுச்சிகளுக்குக் கவிதை வடிவம் தரமுயன்ற இளைஞர்களின் விலையில்லாக் கவிமடல் தான் வானம்பாடி. வானம்பாடி கவிதை இதழாக மட்டுமின்றி இயக்கமாக உருவெடுத்தது கோயம்புத்தூரில் தான். இந்த இயக்கத்தில் எழுதியவர்கள் தான் புதுக்கவிதையில் முத்திரைக் கவிஞர்களாகத் திகழ்ந்தனர்.

தமிழ்ப்பேராசிரியர்களும் புதுக்கவிதை முன்னோடிகளுமாகச் சேர்ந்து தொடங்கிய வானம்பாடிகள் கவிதை இயக்கம் ஆங்கிலப் பேராசிரியரான பாலாவையும் இணைத்துக்கொண்டது. இந்தக் காலகட்டத்தில் தான் பாலாவின் கவிதைகளும் கவிதைக்களுக்கான திறனாய்வும் வெளிப்பட்டன. புதுக்கவிஞர்கள் மேத்தா, சிற்பி, புவியரசு, தமிழ்நாடன், மீரா, சிதம்பர நாதன், தேனரசன், சி.ஆர். ரவீந்திரன் முதலானவர்களின் கவிதை நெருக்கம் பாலாவுக்குக் கிடைத்தது. இந்த உற்சாகத்தில் இவரின் கவிதைப் பயணம் உச்சத்தை எட்டியது.

"பாலாவின் காலம்- வானம்பாடிகளின் வசந்த காலம்!
புதுக்கவிதையின் பொற்காலம்!"[10]

என்பார் கவிஞர் மு.மேத்தா.

வானம்பாடி இயக்கம் தான் இரா. பாலச்சந்திரன் என்னும் வேதியியல் விரிவுரையாளரை 'பாலா' என்ற புனைப்பெயரில் இணைத்துக்கொண்டு பாலாவின் கவிதை ஆளுமையை வெளிக்கொணர்ந்து தமிழ்ப்பேராசிரியர்களாலும், புதுக்கவிதை முன்னோடிகளாலும் இலக்கிய நண்பர்களாலும் 'கவிஞர் பாலா'வாக அறிமுகப்படுத்தியது.

## 2.8 கவிதைக் கொள்கை

புதுக்கவிதை என்பது வடிவ மீறல் அல்ல. வெறும் வடிவ மீறலே புதுக்கவிதை என்று எண்ணி எழுதியவர்கள் தோற்றுப் போனார்கள். புதுக்கவிதை என்பது மாறிக் கொண்டிருக்கும் சமுதாயத்தைப் பதிய வைக்கும் புதிய இலக்கிய முயற்சியாகும்.

புதுக்கவிதை குறித்துப் பல்வேறு தளங்களில் ஆய்வினை நிகழ்த்தியவர் பாலா. இத்திறனாய்வின் வழி கவிதை குறித்த கொள்கைகள் அவரது ஆளுமையின் வெளிப்பாடுகளாகத் திகழ்கின்றன.

தமிழ்க்கவிதையியலைக் கூர்ந்து நோக்கும் போது, தமிழ்க்கவிதை எப்போதும் பேச்சாகத்தான் இருந்து வந்திருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது. கம்பன், வள்ளுவர், இளங்கோ, பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன் என்று எல்லோருடைய கவிதைகளிலும் தூக்கலாக இருப்பது பேச்சுத்தான். எனக்கென்னவோ மேற்கின் மௌனம், கிழக்கின் பேச்சை வெற்றி கொள்ள இயலவில்லை. "நான் பேச்சுத்தான் கவிதை"[11] என்று நினைக்கிறேன் என்பார் பாலா.

பேராசிரியரும் திறனாய்வாளருமான பாலாவின் கவிதை குறித்து பேராசிரியர் க.பஞ்சாங்கம் "வாழ்க்கை தரும் சோகம்தான் உன்னத கவிதைக்களுக்கான மூலதனம் என்பது பாலா கவிதைகளுக்கும் பொருத்தமாகிறது. பொதுவாகவே கவிதை என்ற வடிவமே தன்னுடனான ஓர் உரையாடல்தான் என்பர்; நாவல் என்ற வடிவம் புறரீதியானது. ஆனால் கவிதை வடிவம் அகரீதியானது; அகத்திற்குள் மேற்கொள்ளும் பயணத்தின் வெளிப்பாடு அது; அகத்திற்குள் பயணிக்கும் போது அங்கே எல்லோருக்குள்ளும் இருப்பது துக்கம்தான்"[12] என்கிறார்.

கவிஞர் பாலா தன் கவிதைக் கொள்கை குறித்து "சிந்தனையின் ஆற்றலாலும், ஒரு கணச் சிலிர்ப்பாலும் உருவாக்கப்பட்ட அனுபவ வெளியீடு என் கவிதை. எனவே என் கவிதை பொழுது போக்குக்காக எழுதப்படுவதல்ல.

கவிதை வெறும் உணர்ச்சிகளைக் கொட்டுவதல்ல. ஒரே ஒரு அலைவரிசையுள்ள மனிதர்களுக்கிடையே நிகழும் அர்த்தமுள்ள பரிமாற்றம். நான் மரபை மதிக்கிறேன். அதே சமயம் கால மாறுதல்களை ஏற்றுக்கொள்கிறேன். என் குரலும் முகமும் பிறரிடமிருந்து வேறுபடுவது போல என் கவிதையியலும் மாறுபாடு உடையது. கவிதை தனக்காகவே வாழலாம். ஆனால் அது எனக்காகவும் உங்களுகக்காகவும் இருப்பதில் என்ன தவறு.

பரிசுத்த கவிதை அழகானது. கடல் மீது பெய்யும் மழைபோல. ஆனால் குறிக்கோள் உள்ள கவிதை விலை நிலங்களின் மீது பெய்யும் மழை"[13] என்பார்.

சமூகரீதியாக மட்டுமின்றி தனிமனித வாழ்வின் நோக்கும் கவிதைக்குரிய புதிய கருத்தோட்டங்களும் தேவை என்பது பாலாவின் கருத்தியல். இதிலிருந்து அவரது கவிதைக் கொள்கையை அறிந்து கொள்ளலாம்.

**2.9 திறனாய்வாளர்**

பாலா ஆங்கிலம், தமிழ் என இரண்டு மொழிகளிலும் புலமைமிக்கவர். அதனால் மேலை இலக்கியச் செழுமைகளை தமிழுக்கு இறக்குமதி செய்தவர். தமிழ்ப்புதுக்கவிதை பற்றி இதுவரை வெளிவந்துள்ள திறனாய்வு நூல்களுள் குறிப்பிடத்தக்கது பாலாவின் 'புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை' நூலாகும். இதனைத் தொடர்ந்து 1977-இல் 'சர்ரியலிஸம்' என்ற நூல் வெளிவந்தது. இவ்விரண்டு நூல்களும் பாலாவின் திறனாய்வுக்கு கல்வியாளர்களிடையே அங்கீகாரத்தைத் தந்தது எனலாம்.

"அவரின் புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை இளங்கவிஞர்களுக்கு வழிகாட்டும் ஆத்திச்சூடி. அவரின் சர்ரியலிஸம் ஆங்கில இலக்கிய உத்திகளைத் தமிழுக்குக் கொண்டு வந்த புது முயற்சி. இந்தப் புத்தகங்களை எழுதும்போது அவர் கையாண்ட புத்தகங்கள், எழுதிய பக்கங்கள், இடையறா உழைப்பு, அவர் எடுத்துக்கொண்ட முயற்சியில் நேர்மை, சிறந்தவற்றைத் தர வேண்டுமென்ற முனைப்பு இவற்றின்

வெளிப்பாடு"[14] என்ற அகல்யாவின் கருத்தியல் பாலாவின் திறனாய்வின் ஆளுமையைக் காட்டுகிறது.

ஒப்பியல் ஆய்வுக்கு அடையாளம் இவருடைய "பாரதியும் கீட்சும்" என்ற நூலாகும். பாரதியின் குயில்பாட்டும், கீட்சின் கருத்தாலும், கவிதையாலும், ஒப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இந்நூல் அனைவரின் பாராட்டினையும் பெற்றதாகும்.

தமிழ் இலக்கிய விமர்சகர்கள், தமிழ் நவீனத்துவத்தின் முன்னோடிகள், கவிதைப்பக்கம், முன்னுரையும் பின்னுரையும் ஆகிய நூல்கள் திறனாய்வு, விமர்சனம் என்ற இருதளங்களில் பாலாவின் ஆளுமையை எடுத்துக்காட்டுகின்றன. பாலாவின் திறனாய்வுப் பக்கத்தை திசை திருப்பியவர் பேராசிரியர் கா.செல்லப்பன் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### 2.10 மொழிப்பெயர்ப்பாளர்

மொழிபெயர்ப்பில் தனக்கெனத் தனி முத்திரையைப் பதித்தவர் பாலா. உலக இலக்கியங்களையும், பிற இந்திய மொழி இலக்கியங்களையும் தமிழுக்கும், தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும் அறிமுகப்படுத்தும் முயற்சியில் 'அன்னம்' வெளியிட்ட முதல் காதல் வரிசை வித்யாபதியின் காதற்கவிதைகள்.

கண்ணன் ராதையை மையமாகக் கொண்டு காதல் ரசம் ததும்பும் வண்ணம் எழுதப்பட்ட கவிதைகளை பாலா தமிழ்ப் புதுக்கவிதைக்கே உரிய செறிவான நடைப்பாங்கில் தமிழாக்கம் செய்திருந்தார்.

"மொழிபெயர்ப்பு என்ற அடையாளம் இல்லாமல் இயல்பான வாசிப்பு அனுபவத்தை நமக்குக் கொடுத்த அந்த நூல் கவிதை மொழி பெயர்ப்பாளர்களுக்கு என்றும் ஒரு உதாரணமாகத் திகழ்கிறது" [15] என்பார் முனைவர் ஆ. தனஞ்செயன்.

இது பாலாவின் தமிழாக்கத்திற்கு கிடைத்த அங்கீகாரமாகும். இது போல் தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும் பாரதி, பாரதிதாசன், மீரா, மேத்தா, சிற்பி ஆகியோர் கவிதைகளை பல்கலைக்கழக வெளியீட்டிற்காக மொழிபெயர்த்துள்ளார்.

பல்கலைக்கழக தமிழ், ஆங்கிலம் மொழிப்பெயர்ப்புக்குக் குழு உறுப்பினராகப் பாலா திகழ்ந்துள்ளார்.

மொழிபெயர்ப்பிலும் புதிய சொற்றொடர்களை அறிமுகப்படுத்தியுள்ள திறம் பாலாவின் ஆளுமையை வெளிப்படுத்தும். ஞாபகயுத்தம், கருத்துப்புல வெளிச்சம், அர்த்தப்புள்ளி, மௌனவெப்பம், வார்த்தைப்பசி, மௌனக்கவிகள் இப்படிப் பல சொற்கள பிரமிக்கவைக்கும். இது பாலாவின் மொழி ஆளுமைக்குக் கிடைத்த அங்கீகாரமாகும்.

## 2.11 சொற்பொழிவாளர்

பாலா பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியர், கவிஞர், திறனாய்வாளர் போன்ற பல்வேறு தளங்களில் தடம்பதித்தவர் என்பது பலரும் அறிந்ததே. மேலும் பாலா சிறந்த சொற்பொழிவாளர். பேச்சுக்கென்றே அமைந்த குரல் அவரது குரல்.

செஸ்டர் என்னும் அறிஞர் சொல்லுவார், ஒரு நல்ல குரலுக்கு விலையாக என் அறிவில் பாதியை வழங்கத் தயாராக இருக்கிறேன் என்று. நல்ல குரல் ஒரு அரிய செல்வம். அந்த செல்வம் முழுமையாக வாய்த்திருக்கிறது பாலாவுக்கு. ஆங்கிலத்தில் பேசினாலும் சரி, தமிழில் பேசினாலும் சரி, கேட்பவர்களை காந்தமாய் இழுக்கும் கம்பீரப் பேச்சுக்குச் சொந்தக்காரர்.

பேச்சினால் கேட்போரைக் கிறங்கடிக்கும். எழுத்தினால் எண்ணத்தை விருந்து வைக்கும். பாலா என்றொரு தென்றல் தான் அது. ஒரு முறை கவிஞர் பாலாவின் பேச்சைக் கேட்டுப் பாருங்கள். பலமுறை கேட்டு அவர் வசமானவன் நான்.

"பண்டை வசம் போய்ப் பரவசமாய்! என்று கவிஞர் அதிவீரராமன் சொன்ன அதிசய நிலைதான் அது. கொஞ்சம் சரசரப்போடு கூடிய செவிக்கினிய அழுத்தமான குரல் பாலாவுக்கே உரிய தனியுடைமை அது. அதனோடு அமுதும்

தேனும் எப்படிக் கூட்டணி அமைத்துக் கொண்டன. இன்று வரை விடை காண முடியவில்லை"[16] என்பார் முனைவர் ம.பெ.சீனிவாசன்.

வானம்பாடியில் கவிதைகள் எழுதிய போது கவிஞர் மு.மேத்தா தலைமையில் கவியரங்குகள் நடந்தன. அந்தக் கவியரங்குகளில் பாலாவின் கவிதை முத்திரை பெற்றிருக்கும். காரணம் கவிதையை வாசிக்கிற முறையும் அட்சரசுத்தமாக உச்சரிக்கிற முறையும் தான். அவருடைய குரல் கவிதைக்கான சுத்தக்குரல். இன்னாத குரல் அவரிடத்தில் இருக்காது. வார்த்தைகளை கண்ணப்ப நாயனார் மாதிரி தேர்ந்தெடுத்துப் பேசுவார். கோபத்தைக்கூட மென்மையான வார்த்தைகளில் வெளிப்படுத்துவார்.

பாலாவின் கரகரத்த குரல் மொழி எல்லைகளைக் கடந்து இலங்கை கலாச்சார அமைச்சகம் நடத்திய மாநாட்டிலும், நியூயார்க்கில் நடைபெற்ற எழுத்தாளர்கள் மாநாட்டில் முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் அவருடன் பயணம் செய்து உரையாற்றியும் பாராட்டைப் பெற்றவர். சீனத்துக்கு, எழுத்தாளர் குழுவுக்குத் தலைமை தாங்கிச் சென்றவர். 2005-ல் கனடாவில் நடைபெற்ற சார்க் மாநாட்டில் இந்தியாவுக்கு பெருமை சேர்த்த சொற்பொழிவாளர் பாலா.

### 2.12 சிற்றிதழ் பற்றாளர்

பாலா சிற்றிதழ்கள் மீது பற்றுக்கொண்டவர். வானம்பாடி புதுக்கவிதை இதழில் அவருக்கு பொறுப்பு இருந்தது. ராசிபுரத்தில் பணியாற்றிய போதும் அவர் கையடக்கப்பதிப்பாக சிற்றிதழ் பிரசுரம் வெளியிட்டார். அதில் ஒரு கவிதை,

"நாங்கள் சேற்றில் கால் வைக்காவிட்டால்
நீங்கள் சோற்றில் கை வைக்கமுடியாது"

கவிஜோதியின் இக்கவிதை தமிழக விவசாயிகளின் போராட்டக் குரல் ஆயிற்று"[17] என்பார் தமிழ்நாடன். அதன் பிறகு புதுக்கோட்டையில் உள்ள மன்னர் துறை சிங்கம்

கல்லூரியில் ஆங்கில விரிவுரையாளராக பாலா பொறுப்பேற்ற பிறகுதான் இலக்கிய ஈடுபாடு அதிகரித்தது.

பாரத ஸ்டேட் வங்கியில் பணிபுரிந்த அ. கல்யாண சுந்தரம் (கவிஞர் அகல்யா) மற்றும் சண்முக சுந்தரம் முதலானவர்கள் தந்த உற்சாகத்தில் தமிழில் என்றும நினைவு கூறத்தக்க ‘சுவடு’ எனும் இலக்கிய இதழை பாலா முன்னின்று நடத்தத் தொடங்கினார். சுவடு மூலம் சுவடுகள் பதித்தவர் பாலா.

சுவடு சிற்றிதழ் 1978-80. இது பாலாவின் இலக்கியச்சுவடு. இதில் தமிழ் இலக்கிய விமர்சனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

சிவகங்கையில் கவிஞர் மீரா தொடங்கிய ‘அன்னம்’ இலக்கிய இதழையும் பாலா முன்னின்று நடத்தினார்.

### 2.13 சாகித்ய அகாதெமி ஒருங்கிணைப்பாளர்

சாகித்ய அகாதெமியின் தேசியக்குழு உறுப்பினராக 2003 ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்ட பாலா அதே ஆண்டில் தமிழ்மொழியின் ஒருங்கிணைப்பாளராகவும் இருந்து திறம்பட பணியாற்றியவர்.

சாகித்ய அகாதெமியின் தமிழ்க்குழுவின் தலைமைப் பொறுப்பேற்ற பின் நிகழ்ந்த கருத்தரங்குகள் அதுவரை யாரும் சாதித்திராத எண்ணிக்கையின் உச்சத்தைத் தொட்டது. திருவண்ணாமலையிலிருந்து, திருநெல்வேலி வரை பரவலாக நிகழ்ச்சிகளை அமைத்த பாலாவின் பாங்கு புதியது. முன் மாதிரியானது.

தமிழ்நாட்டில் பல்கலைக்கழகங்களில் கல்லூரிகளில் சாகித்ய அகாதெமியின் கருத்தரங்குகள் மற்றும் புத்தக வெளியீடு விழாக்களை அதிகம் நடத்தியவர். திறமை வாய்ந்த அனைத்துத் தரப்பினரையும் கருத்தரங்குளில் கலந்து கொள்ள வாய்ப்பினைத் தந்தவர் பாலா என்பது வரலாற்றுச் செய்தியாகும்.

## 2.14 விருதுகளும் பாராட்டுகளும்

படைப்பிலக்கியத்திலும், திறனாய்வுத்துறையிலும் சுவடுகள் பதித்தவர் பாலா. இலக்கிய ஆற்றலுக்கும், ஆளுமைக்கும் கிடைத்த அங்கீகாரம் தான் அவர் பெற்ற இந்த விருதுகளும் பாராட்டுகளும்.

- முதல் கவிதைத்தொகுப்பு 'இன்னொரு மனிதர்கள்', 1991-ல் இந்த நூல் பாரதவங்கியின் சிறந்த கவிதை நூலுக்கான பரிசைப் பெற்றுள்ளது.
- 'திண்ணைகளும் வரவேற்பறைகளும்' இரண்டாவது கவிதை நூல் தமிழக அரசின் சிறந்த நூலுக்கான பரிசினை 2000-ல் பெற்றுள்ளது.
- 2001-ல் இதே நூல் சிற்பியின் அறக்கட்டளை பரிசினைப் பெற்றுள்ளது.

  பாலா சிறந்த பேராசிரியராகத் திகழ்ந்தவர். அதற்கான அங்கீகாரங்களும் விருதினைப் போன்றது தான்.

1995 - இலங்கை கலாச்சார அமைச்சகம் நடத்திய மாநாடு.

2001 - கொல்கத்தா ஜாதவ்பூர் பல்கலைக்கழகத்தில் வருகை தரு பேராசிரியர்.

2003 - சாகித்ய அகாதெமி தேசியக்குழு உறுப்பினர் - புதுதில்லி.

2003 - சாகித்ய அகாதெமி தமிழ் மொழியின் ஒருங்கிணைப்பாளர்.

2003 - நியூயார்க்கில் நடைபெற்ற இந்திய எழுத்தாளர்கள் கருத்தரங்கில் முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் அவர்கள் பாலாவின் பேச்சாற்றலை வியந்து பாராட்டியமை.

2005 - கனடாவில் நடைபெற்ற சார்க் மாநாட்டில் பங்கேற்பு.

2005 - புதுதில்லியில் நடைபெற்ற உலகப் புத்தகக் கண்காட்சியில் அனைத்து மொழிக்கவிஞர்களுடன் கலந்துரையாடல்.

2006 - சீனாவில் நடைபெற்ற எழுத்தாளர்கள் சந்திப்பில் இந்தியாவின் சார்பில் பங்குபெற்றமை.

சீனாவைத் தொடர்ந்து சிங்கப்பூரிலும் இலக்கியப் பயணம் மேற்கொண்டு பல்வேறு சிறப்புகளைப் பெற்றுள்ளார்.

### 2.14.1 பாராட்டுரை

பாலாவின் படைப்புத்திறன், பண்புநலன்களை பல்வேறு திறத்தினரும் வியந்து கருத்தியல்களைப் புலப்படுத்தியுள்ளனர். அவற்றுள் சில இப்பகுதியில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

### 2.24.1.1 கவிஞர் சிற்பி

"மொழியை இரும்பாக்கிக் கவிதையைக் கரடுமுரடான இயந்திரமாக்கிப் படிப்பவன் நெஞ்சைச் சுமை தாங்கி ஆக்கும் கொடுமைக்கு ஒருபோதும் இவர் துணைபோனதில்லை. மெத்தப் படித்த அனுபவம் எளிமையில் கவிதையில் கனத்தை முன் வைக்கிறது.

ஒற்றை இறகின் அசைந்திறங்கும் நேர்த்தியில் ஒரு சரித்திரத்தையே அசைபோட வைக்கிற தருமு சிவராமின் சாகஸம் போல்"[18]

### 2.14.1.2 பேராசிரியர் க.பஞ்சாங்கம்

"பாலாவை அறிமுகமாக்கிக் கொண்ட அந்த ஆண்டில் தான் அவருடைய புகழ்பெற்ற 'சர்ரியலிஸம்' (1977) நூல் வெளிவந்தது. அந்த நூலை வாசிக்க வாசிக்க 'பாலா' என்கிற ஆங்கிலப் பேராசிரியர் எனக்குள் பரவினார்.

'சர்ரியலிஸம்' என்ற நூல் மூலம் கவிதை குறித்து இப்படியெல்லாம் உரையாட வாய்ப்பிருக்கிறதா? என்று வியந்து வியந்து கவிதை குறித்த எனது அறிதல் இருந்த நிலை பற்றி வெட்கப்பட்டிருக்கிறேன்".[19]

### 2.14.1.3 முனைவர் ஆ.தனஞ்செயன்

"வானம்பாடி இயக்கத்தைச் சார்ந்த கவிஞர் பாலாவின் தலைமையில் கவிதை வழங்கினேன் என்பதில் எனக்கு நிறைந்த மகிழ்ச்சி. பின்னர் அவருடைய புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை என்ற நூல் வந்தது. அதனை வாங்கிய பேராசிரியர்

ஆ. சொக்கநாதன் படித்து முடித்துக் கொடுக்கும் வரையில் காத்திருந்து படித்தேன். முன்னர் படித்த வல்லிக்கண்ணன் உள்ளிட்டோரின் கட்டுரை நூல்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டு ஒரு புதுப்பார்வையைத் தான் கொண்டிருந்தது."[20]

### 2.14.1.4 கவிஞர் அகல்யா

"நவீன தமிழ் இலக்கியம் ஆங்கில இலக்கியம் பற்றிப் பேசுகின்ற சுகம் தனி. எல்லாக் கேள்விகளுக்கும் நிதானமான பதிலில், தெளிவடைய வைக்கிற தீர்க்கமான அறிவுத்திறன் அவருடையது. எந்த விதத்திலும் குரலில் உஷ்ணம் ஏறாமல், குதர்க்கமான பதில்களை விடுத்து கண்ணியமான விவாதத்துக்கு வழிகோலுவது அவரின் தனித்தன்மை".[21]

### 2.14.1.5 பேராசிரியர் நா. தர்மராஜன்

"முனைவர் இரா. பாலச்சந்திரன் சிவகங்கையில் பிறந்து வளர்ந்தவர். அரசு உயர்நிலைப்பள்ளியில் கல்வி கற்றார். நானும் அங்குதான் படித்தேன். அந்தப் பள்ளிக்கூடத்தில் நிலவிய இலக்கியச்சூழல் ஆண்டு தோறும் சில மாணவர்களை இலக்கிய ஆர்வலர்களாக மாற்றியது. அவர்கள் நூலகத்தில் நிறையப் படித்தவர்கள் கையெழுத்துப் பத்திரிக்கை நடத்தினார்கள். கவிதை எழுதினார்கள். முதிர்ச்சி இல்லாத மாணவப் பருவத்திலேயே எதிர்காலத்தை முடிவு செய்து கொண்டார்கள்."[22]

### 2.14.1.6 கவிஞர் மு.மேத்தா

"நட்பின் மேன்மையை உணர வேண்டுமானால் நீங்கள் பாலாவுடன் பழகிப் பார்க்க வேண்டும்.

எண்ணற்ற இதயங்களில் இடம்பிடித்தவர் என்ற பெருமை எனக்கு எப்போதும் உண்டு. என் எதிரிகளால் கூட இதை மறுக்க இயலாது. ஆனால் பாலாவின் இதயத்தில் எனக்கோர் இடம் கிடைத்திருப்பது என் பெருமைகளின் பெருமிதம்.

அவர் இதயத்தில் எனக்குப் போட்டிருக்கும் ஆசனம் என்னைப் பொறுத்தவரை சிம்மாசனம்.

கல்லாக இருந்தேன்

அவன் என்னைச் செதுக்கினான்

நான் சிலையானேன்!

சொல்லாக இருந்தேன்

அவன் என்னை உச்சரித்தான்

நான் மொழியானேன்!

முள்ளாக இருந்தேன்

அவன் என் தோள் தொட்டான்

நான் மலரானேன்!

பாலாவின் நட்பை

உணர முடியுமே தவிர

உரைக்க முடியாது

பாலாவின் படைப்பைப்

பாராட்ட முடியுமே தவிர

எடை போட இயலாது…” [23]

### 2.14.1.7 இரா. கள்ளப்பிரான்

"அன்னைமொழி தமிழிலும் அயல்மொழியாம் ஆங்கிலத்திலும், ஆழமான புலமை கொண்டவர் கவிஞர் பாலா. அவருடைய மேடைப்பேச்சுக்களும், வானொலிப் பேச்சுக்களும், வானொலியில் அன்பர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் அளித்த பாங்கும், கேட்டார் பிணிக்கும் தகைமையாய், கேளாரும் கேட்பதாயமைந்தது. ஆங்கிலமும், அழகுத் தமிழும் அவரிரு கண்கள். அவற்றின் மூலம் உலகைப் பார்த்து அவரது உள்ளத்தில் ஊறிய கருத்துக்களை உலகுக்கு உணர்த்தி வருகின்ற பாங்கும் ஊரறியும்."[24]

### 2.14.1.8 எழுத்தாளர் பொன்னீலன்

"அவர் தன் நூல்களில் கவிதையை அறிமுகப்படுத்தும் போதே அவற்றைப் புரிந்து கொள்ளவும் வழிகாட்டுகிறார். அவற்றின் பின்னாலுள்ள வாழ்வு தொடர்பான சிக்கல்களையும், படைப்புத் தொடர்பான புதுமைகளையும் நளினமாக உணர்த்தி வாசகரைக் கவிதைக்குள் நுழைத்துவிடுகிறார். இந்த வகையில் புதுக்கவிதையின் பன்முகப் பரிமாணங்களைத் தமிழுக்குத் தெளிவாக அறிமுகம் செய்த ஒரு இலக்கிய விமர்சகராகவும் அவர் அமைந்து விடுகிறார்".[25]

### 2.14.1.9 கவிஞர் புவியரசு

'சினிமாவுக்கு பாலாவுடன் பாட்டெழுதப் போனேன்' என்ற தலைப்பில் கவிஞர் புவியரசு எழுதிய கட்டுரை, படக்காட்சி போல் பாலாவின் திரையுலக அனுபவங்களை விளக்குகிறது. முத்தாய்ப்பாக சில வரிகள்.

"என்னை விட பாலாதான் கூர்மையாகக் கதை கேட்டது போல் தோன்றியது திணறிப்போய் 'என்ன பாலா?' என்றேன்.

அதற்குள் குணசிங் மெட்டை வாசிக்க ஆரம்பித்தார். உருவமற்ற ஒலிகளால் முணுமுணுத்தபடி பாடலை, அதன் பல்லவியை பாடிக் காட்டினார்..... வாசித்துக் காட்டினார். எல்லாருமே என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

'பாலா' என்றேன் மெல்ல பரிதாபமாக!

அப்போது என்கையில் நேற்று வாங்கிய 'சண்டே' என்ற ஆங்கில வார இதழ் இருந்தது.

பாலா அதை என் கையிலிருந்து உருவி அதன் கடைசி அட்டையைத் தம் விரலால் சுட்டிக் காண்பித்தார்.

ஆகா என்ன காட்சி

ஒரு பெரிய நிலா. அதன் குறுக்காக ஒரு பறவை பறந்து போகிறது! பாட்டு வந்துவிட்டது. பாலாவின் சுட்டும் விரல் முனையில் !

"இரவு வந்தது- ஒரு

பறவை வந்தது

பறவை வந்தது- ஒரு

கதையைச் சொன்னது... " என்றேன்!

சட்டென இசை இயக்குநரும், பட இயக்குநரும் இதை அப்படியே ஏற்றுக் கொண்டார்கள்! பாடிப் பார்த்ததில் சரியாக இருந்தது".[26]

### 2.14.1.10 ஏர்வாடி எஸ். இராதா கிருஷ்ணன்

"பாலா சாகித்ய அகாடமியின் தென்மொழி இலக்கியங்களுக்கான ஆலோசகர். சிறந்து பணியாற்றுகிறவர். அறிவார்ந்தவர்கள், தங்களை யாரும் அண்டிவிடக்கூடாதென்பதில் கவனமாக இருப்பார்கள். வானமே கிடப்பதாக வாழ ஒரு தீவை வடிவமைத்துக் கொள்கிறவர்கள் நடுவே இலக்கிய உலகில் எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் நிரை என நினைப்பவரும் நடப்பவருமான சிலருள் பாலாவும் ஒருவர்".[27]

### 2.14.1.11 முனைவர் ம.பெ. சீனிவாசன்

"பட்டியலிட்டுச் சொல்லத்தக்க பல நூல்களின் ஆசிரியர் சிலர். ஆனால் காலமெல்லாம் இவர் பெயர் சொல்லுவதற்கு ஒரு நூல் போதும். 'புதுக்கவிதை - ஒரு புதுப்பார்வை' என்றும் ஒப்பற்ற நூல்தான் அது. பழைய இலக்கண இலக்கியக் காடு முழுவதும் சுற்றித்திரிந்து எம் போன்றோரைப் பற்றி நிறுத்திப் புதுக்கவிதையின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்த பெருமை இந்த ஒரு நூலுக்கு உண்டு".[28]

### 2.14.1.12 எழுத்தாளர் சி.ஆர். ரவீந்திரன்

"பாலா கதை சொல்லக் கேட்டிருக்க வேண்டும். அப்படியொரு நல்ல வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அன்று, கோவை செந்தமிழ் அச்சக உரிமையாளர் அமரர்.மீ. மாரியப்பனும், பாலாவும், நானும் கோவை பந்தயச் சாலையில் மாலை நேரத்தில் நடந்து சென்று கொண்டிருந்தோம். அப்போது புதுமைப்பித்தனின் "கடவுளும்

கந்தசாமிப்பிள்ளையும்" கதையை அப்படியே சொல்லிக்கொண்டு வந்தார். அதைக்கேட்டு மனம் விட்டுச் சிரித்து மகிழ்ந்தார் அமரர் மீ. மாரியப்பன். நானும் தான். புதுமைப்பித்தனால் கூட அப்படித் தன்னுடைய கதையை விவரித்திருக்க முடியாது".[29]

### 2.14.1.13 விமர்சகர் தமிழ்நாடன்

"தமிழ் மண்ணையும் மக்களையும் நேசிக்கும் ஆவலில் கட்டுரை எல்லாம் கதம்ப உரையாக ஞானி, இன்னும் தேனரசன், சிதம்பரநாதன், தமிழ்நாடன், சி.ஆர். ரவீந்திரன் எனத் தத்தமக்கு ஒரு தனிபாணி. இவர்களுடைய கவிதைகளைப் பார்க்க பாலா தனி குணம் வெளிப்பாட்டு முறை. பாலா எப்போதும் ஒரு விமர்சகரே என்பது போல இவர் நூல்களில் கருத்து விளக்கம். ஆம் சமூக விமர்சனம் அற்ற எழுத்து எதற்கு?"[30]

### 2.14.1.14 முனைவர் ந. கலைதாசன்

"பிறர் மையை தன் எழுதுகோலில் நிரப்பி எழுதும் பண்பிலர் இவர். எழுத்து இவரது எழுத்து. கருத்து இவரின் கருத்து. நடை இவருக்கே உரித்தான நடை. மற்றவர் எழுத்தின் தாக்கத்தை இவரிடம் காண இயலாது. ஆனால் இவரது எழுத்தின் தாக்கத்தைப் பிறரிடம் காணலாம்."[31]

### 2.14.1.15 பேராசிரியர் இராம குரு நாதன்

"தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்!

இது தேவாரம்

ஆங்கிலத்தோடு தமிழையும்

மறந்தறியேன்,

இது தங்களின் புகழாரம்!

திறனாய்வு வாசலுக்கு

உங்கள் ஆய்வு

நல்லதொரு திறவுகோல்

நீங்கள் புதுக்கவிதையைத்

துல்லியமாய் அளந்த

துலாக்கோல்!

நல்ல விமர்சகராக இருந்து

தமிழ் விமர்சகர்களைச்

சரியாக இனங்காட்டும்

உங்கள் எழுதுகோல்!”[32]

### 2.14.1.16 கவிஞர் கலாப்ரியா

"பாலாவுக்கு, கற்றுக் கொடுப்பதில் ஒரு ஈடுபாடுமிக்க ஆர்வமுண்டு. நான் அவரிடம் மாணவனாயிருந்ததில்லை. இருந்திருந்தால் ரொம்ப உபயோகமாய் இருந்திருக்கும்.”[33]

### 2.14.1.17 கவிஞர் ஈரோடு தமிழன்பன்

"எளிதான, மென்மையான சொற்களால் படிப்பவரை அசைத்துவிடுகிற ஆற்றல் அவர் கவிதைகளில் உண்டு. ஆங்கிலத்தில் கவிதை எழுத முற்பட்டிருந்தால், அவருடைய கவிதைகளால், தமிழ்க் கவிதைகளால் அவர் அறியப்பட்டிருப்பதை விட அதிகமாக அறியப்பட்டிருப்பார் என்பது என் கருத்து.”[34]

### 2.14.1.18 ஸ்டாலின்- நிகழ்ச்சி அமைப்பாளர், வானொலி நிலையம் கோயம்புத்தூர்

"என் ‘கரிக்கோடுகள்’ நூலுக்கு எழுதிய முன்னுரையில் "காதலுணர்ச்சியை நாடகக் கூறுகளுடன் அமைத்துக் காட்டும் தமிழ் அக இலக்கிய மரபுப்படி சுவையான உரையாடல்கள் ஸ்டாலினுக்கு இயல்பாக வருகின்றன” என்று எழுதி எனக்குள்ளிருக்கும் நாடகம் ஆக்கும் திறமையை எனக்கு உணர்த்தியவர் பாலா அவர்கள் தான்”.[35]

### 2.14.1.19 கவிஞர் தங்கம் மூர்த்தி

"ஆனந்தம் விளையாடும் வீடு, நான்கு அன்றில்கள் ஒன்றான கூடு" என்பது அவர் வீடுதான். மனைவி அவருக்கு வரம். குழந்தைகள் அவருக்குக் கொடை. ஞானப்பிரியா, சரத் கார்த்திக் இருவருக்கும் முழு சுதந்திரம் கொடுத்து வளர்த்தார். இருவருக்கும் மனநிறைவான வாழ்க்கை அமைத்துக் கொடுத்தார். இல்லத்தில் நானும் ஒரு உறுப்பினர் என்ற உரிமையை எனக்கு வழங்குவார். என் பிள்ளைகள் கூட அவரைத்தான் குருவாகக் கருதுகிறார்கள்.

அவரே ஒரு கவிதையில் "ஒரு மனிதன் தொட்டான் மரம் விறகானது இன்னொரு மனிதன் தொட்டான் விறகு வீணையானது" என்று எழுதியிருப்பார். அப்படி என்னை வீணாக்காமல் வீணையாக்கிய இன்னொரு மனிதர் அவர்தான்."[36]

### 2.14.1.20 பேராசிரியர் இரா. மோகன்

"பாலாவின் கவிதைகள் பலவற்றில் வெளிப்படும் அவரது பார்வைப்புலம் தமிழுக்குப் புதிது. கவிதைக்கு உடனடியாக வாசகர்களைப் பெற்றுத்தரும் அன்றாட அரசியல், பகடி, சமத்காரங்கள் ஆகியவற்றிற்கு அவர் ஒரு போதும் முதன்மை தருவதில்லை".[37]

### 2.14.1.21 முனைவர் பெ. சுபாசு சந்திரபோசு

"பாரதி கண்ட கவிதா மண்டலம் போல இவருக்கும் ஒரு கவிதா மண்டலம் புதுக்கோட்டையில் இன்றும் செயல்படுகிறது. புதுக்கோட்டையின் இலக்கிய மையமாக விளங்கியவர். இலக்கிய இயக்கங்களில் 'சர்ரியலிசம்' பற்றி எழுதிய திறனாய்வு முன்னோடி பாலா".[38]

### 2.14.1.22 பேராசிரியர் பால. மணிவண்ணன்

"சந்திரனின் பெயர் கொண்ட சூரியனே
நின் கதிர்கள் என் ஜன்னலுக்குள்
நிதமும் நீளட்டும்

நின்பாற் கடலின் சிதறிய

துளிகளில் நானும் ஒரு துளி…”[39]

இப்படியாக இன்னும் பலரின் கருத்துரைகள் தமிழ் இலக்கியப் பக்கங்களில் பதிவாகி உள்ளன. இவையெல்லாம் பாலாவின் ஆளுமைக்குக் கிடைத்த அங்கீகாரங்களாகும்.

## 2.15 தொகுப்புரை

பாலாவின் வாழ்வும் படைப்பும் என்னும் இவ்வியலிலிருந்து கீழ்கண்ட முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

- ‘பாலா’ என உரிமையோடும் உள்ளன்போடும் இலக்கிய ஆர்வலர்களால் அழைக்கப்பட்ட இவரது இயற்பெயர் இரா. பாலச்சந்திரன் என்பதாகும்.
- சிவகங்கையில் இராமதாஸ் - ஞானாம்பிகை தம்பதியினருக்குப் பிறந்தவர் பாலா.
- சிவகங்கையில் ஆரம்பக்கல்வியையும், காரைக்குடியில் வேதியியல் அறிவியல் பாடத்தை சிறப்புப்பாடமாக எடுத்து இளநிலை பட்டப்படிப்பையும், வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியத்தில் முதுநிலைப் பட்டப்படிப்பையும், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றுள்ளார்.
- அண்ணாமலை பல்கலைக்கழகத்திலும் பின்னர் ராசிபுரம், புதுக்கோட்டை ஆகிய கல்லூரிகளில் ஆங்கில விரிவுரையாளராகவும், இறுதியில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் துறைத்தலைவராகவும் பணி புரிந்து பணி நிறைவு செய்துள்ளார்.
- சிவகங்கையில் கவிதைத் திருவிழாவாக இவரது திருமண விழா நடைபெற்றது. வாழ்க்கைத் துணைவியாக மஞ்சுளாவை ஏற்று இரு குழந்தைகளுக்குப் பெற்றோராயினர். குழந்தைகளுக்குப் பெயரிட்டதிலும்

பாலாவின் இலக்கிய ஆளுமை இடம் பெற்றுள்ளது. பாலாவின் படைப்பாளுமையை அவரது கவிதை, திறனாய்வு குறித்த புத்தகப் படைப்புகள் எடுத்துக்காட்டுகின்றன.

- 'இன்னொரு மனிதர்கள்' என்ற கவிதையின் மூலம் பாலா கவிஞராக அறியப்பெற்றார். தமிழ்க்கவிதையில் புதிய ஆளுமையை வடிவமைத்தவர். பல்வேறு சிற்றிதழ்களில் இவரது படைப்புகள் வெளிவந்துள்ளன.
- வானம்பாடிக் கவிதை இயக்கத்தில் முக்கிய இடம் பெற்றவர். கவிதைக் கொள்கை குறித்த புதிய பார்வையினை புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை வழியாகவும், திறனாய்வு நூல்களின் வழியாகவும் அறிய வைத்தவர். அதனால் திறனாய்வாளர் என்ற அடையாளத்தைப் பெற்றவர்.
- மொழிபெயர்ப்புகளில் புதிய சொல்லாடல்களையும் எளிமையையும் செய்தவர்.

- கரகரத்த கம்பீரக்குரல் வழியே சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்தவர். முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் அவர்களின் பாராட்டுதலை இதற்காகப் பெற்றுள்ளார். சிற்றிதழ்கள் மீது அதிக ஆர்வம் காட்டியவர். தானே முன்னின்று சிற்றிதழ்களை வெளியிட்டவர். கவிஞர் மீராவின் வழிகாட்டுதல் இந்த ஆர்வத்திற்கு துணை புரிந்துள்ளது.
- சாகித்ய அகாதெமி தமிழ்க்குழுவின் ஒருங்கிணைப்பாளராக இருந்து பல கருத்தரங்குகளை திறம்பட நடத்தியுள்ளார்.
- தமிழக அரசின் சிறந்த நூலுக்கான பரிசையும், பாரத வங்கியின் பரிசையும் இவரது கவிதைப் புத்தகங்கள் பெற்றுள்ளன. உயர்ந்த பல அமைப்புகளிலும் அங்கம் வகுத்துள்ளார்.

- கனடா, அமெரிக்கா, இலங்கை, சீனா, சிங்கப்பூர் என்று பல்வேறு நாடுகளுக்கு இலக்கியப் பயணம் புரிந்து தன் ஆளுமையை அடையாளப்படுத்தியிருக்கின்றார்.

## குறிப்புகள்

1. கவிஞர் பாலா மணிவிழா மலர், ப.93.
2. மேலது, ப.33.
3. பாலா, கதவு அருகே சொற்கள், பக்.49-50.
4. கவிஞர் பாலா மணிவிழா மலர், ப.80.
5. மேலது, ப.119.
6. மேலது, ப.16.
7. பாலா, நினைவில் தப்பிய முகம், ப.48.
8. பாலா, திண்ணைகளும் வரவேற்பறைகளும், ப.14.
9. பாலா, இன்னொரு மனிதர்கள், ப.46.
10. கவிஞர் பாலா மணிவிழா மலர், ப.31.
11. பாலா, திண்ணைகளும் வரவேற்பறைகளும், ப.8.
12. கவிஞர் பாலா மணிவிழா மலர், ப.22.
13. மேலது, ப.69.
14. மேலது, ப.28.
15. மேலது, ப.26.
16. மேலது, ப.53.
17. மேலது, ப.62.
18. மேலது, ப.16.
19. மேலது, ப.18.
20. மேலது, ப.26.
21. மேலது, ப.27.
22. மேலது, ப.29.
23. மேலது, பக்.33-34-35.
24. மேலது, பக்.38-39.
25. மேலது, ப.41.
26. மேலது, ப.46.
27. மேலது, ப.52.
28. மேலது, பக்.54-55.
29. மேலது, ப.60.
30. மேலது, ப.61.

31. மேலது, ப.75.
32. மேலது, ப.78.
33. மேலது, ப.80.
34. மேலது, ப.81.
35. மேலது, ப.85.
36. மேலது, ப.91.
37. மேலது, ப.103.
38. மேலது, ப.106.
39. மேலது, ப.109.